1982 மார்ச் 17]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைக் குறிப்பாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்னைகள் பல்வேறு பள்ளிகளிலும் இருப்பதால் இதை அமைச்சர் ஆராய்ந்து எல்லா பள்ளிகளுக்கும் உகந்த வகையில், இறந்து போனாலுங்கூட அந்த ஸ்காலர்ஷிப் பெற்றோர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு அனுப்புமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடிமக்கள் நலத்துறை இயக்குநர் ஆகியோர் செய்ய வேண்டிய காரியம். அவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்க வேண்டும் கொடுக்கவில்லையென்றால் என்னு டைய கவனத்திற்கு கொண்டு வந்தால் ஏன் கொடுக்கப்பட வில்லையென்று கேட்டு தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இப்பொழுதே அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லித்தான் நாம் ஆணை பிறப்பித்திருக்கிறோம்.

சென்னை கன்னிமாரா பொது நூலகம்

*வினா எண். 522—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கன்னிமாரா நூலகத்தின் நிர்வாக ஒழுங்கீனம் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார்கள் வந்தனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; (அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவைகள் பொதுநூலக இயக்குநருக்கு அனுப்பப்பட்டன. அதில் குறிப்பிடப் பட்டுள்ள குறைகள் களையப்பட்டு, நூலகம் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூலகத்தில் புத்தங்களைக் கையெழுத்து போடாமல் நிர்வாகம் கொடுப்பதும், புத்தங்கள் சரியாக வரிசைக் கிரமமாக அடுக்கப் படாமல் இருப்பதும் ஆகிய புகார்கள் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே. பல்வேறு புகார்கள், கடிதங்கள் தொடர்ச்சியாக வந்ததன் காரணமாக, கன்னிமாரா பொது நூலகத்தில் கீழ்க் காணும் நடவடிக்கைகளை நாம் எடுத்திருக்கிறோம். 1. நூலகத் திற்கு வருகை புரியும் வாசகர்கள் தங்கள் கருத்துக்களை, குறைபாடுகளைத் தெரிவிக்கும்பொருட்டு, வாசகர்கள் கருத்தறியும் பெட்டி ஒன்று வைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

2. நூலகத்தில் புதிதாக அங்கத்தினர்களாகச் சேர விரும்புபவர்களுக்கு, அங்கத்தினர் விண்ணப்பத்துடன் நூலக விதிமுறைகள் அடங்கிய பிரசுரம் ஒன்று வழங்கப்படுகிறது. 3. நூலகத்தில் பணியாற்றும் நிரந்தர அடிப்படை ஊழியர்கள் அனைவருக்கும் சீருடை வழங்கப்பட்டுள்ளது. 4. நூலகத்தில் அன்றாட நிர்வாக நலனைக் கருதி, அனைத்துத் தொழில் நுட்பப் பணியாளர்களும் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி, முறைப்படி வகுக்கப்பட்டபடி பணி புரிகின்றனர். 5. நூலகத்திற்கு வருகை புரியும் அனைவரும் தங்களின் பெயர், முழு முகவரி, மற்றும் கையொப்பம் ஆகியவைகளை நிரப்பும்பொருட்டு, நுழைவு வாயிலிலே ஒரு பதிவேடு வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. 6. இந்நூலகத்தின் பழைய கட்டிடத்தில் 1930-ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரிய நூல்கள் பாதுகாப்புடன் வைக்கப் பட்டுள்ளன. மேற்படி அரிய ஆராய்ச்சி நூல்களைப் படிக்கவும் குறிப்பு எடுக்கவும் வரும் ஆராய்ச்சியாளர் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கவும், பொதுவாக வரும் அனைத்து வாசகர்களையும் அனுமதித்தால் ஆராய்ச்சிக் குறிப்பெடுப்பவர்களுக்கு அது இடையூறாக அமையும் என்பதால்தான் அந்நூலகத்தை பயன்படுத்தும் வாசகர்களை மட்டுமே அனுமதிக்கும் பொருட்டு அனுமதிச் சீட்டு தரப்பட்டு செயல்பட்டு வருகிறது. நூலகத்தில் பொதுமக்கள் தொடர்புடைய அனைத்துப் பணியாளர்களுக்கும் பெயர்வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. நூலகத்தில் நூல் எடுக்கும் பிரிவில் வாசகர்களுக்கு உதவும் பொருட்டு குறிப்புதவியாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்னிமாரா நூலகத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைய நூல்களைப் படித்ததாகக் குறிப்பிருக்கிறது. அந்த கன்னிமாரா நூலகம் தற்போது அன்னியர் பெயரிலே இருக்கின்றது. அதை மாற்றி அதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே அப்படிப்பட்ட கருத்துரு அரசின் ஆலோசனையில் இல்லை.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கன்னிமாரா நூலகத்திலே நிர்வாக ஒழுங்கீனங்களுக்காக அந்த நூலகத்தின் நூலகர் திரு. தில்லநாயகம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது, ஆனால் அவர் நூலகத்துறைக்குச் சிறந்த முறையிலே பணி யாற்றியவர், தொண்டாற்றியவர் என்று அரசாங்கம் உட்பட பல்வேறு நிறுவனங்கள் அவரைப் பாராட்டி உள்ளன. அத்தகைய ஒருவரை இன்னமும் சஸ்பென்சனில் வைத்திருப்பது சரியா? அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்யப்பட்ட அவர் பது சொல்லப்பட்ட புகார்களின் அடிப்படையில் விசாரிக்கப் மீட்டு, விளக்கங்கள் கேட்கப்பட்டு நடவடிக்கை தனியா

1982 மார்ச் 17]

எடுக்கப்பட்டு வருகின்றது. இந்தநேரத்தில் உறுப்பினர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அரசில் பணி புரியும் யாராக இருந்தாலும் தாங்கள் மக்களுக்குப் பாடுபட வேண்டும் என்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்களுடைய முன்னேற்றத்திற்காகத்தான் தங்கள் கையிலே வைத்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டும் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், அமைச்சர்கள் போன்றவர்கள், மக்களுக்குப் பணிபுரியவேண்டும் என்ற வேகத்தோடு செயல் படுகிற போது, அதற்குத் தடையாக அதிகாரிகள் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுமானால், தனிப்பட்ட முறையில் அவர்கள் நல்லவர்களாக இருக்கலாம், அது வேறு அப்படி அவர்கள் தடையாக இருந்தால் அந்தத் தடையை நீக்குகின்ற பொறுப்பை அரசு எடுக்கத்தான் செய்யும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ர. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, லைப்ரரி சயன்ஸ் என்ற துறையில் மிகவும் வல்லுநராக இருந்து, சிறந்த பெயரைத் தமிழ்நாட்டுக்குத் தேடித்தந்த ரங்காதனுடைய பெயரை அந்தக் கன்னிமாரா நூலகத்திற்கு வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கன்னிமாரா நூலகத்தின் பெயரை மாற்றவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. அப்படி மாற்றவேண்டும் என்று நாம் நினைக்கின்றபோது அதை பேரறிஞர் அண்ணா பெயராலோ அல்லது ரங்கநாதன் பெயராலோ அல்லது வேறு பெயராலோ மாற்றுவது குறித்துப் அப்போது பேசலாம். ஆனால் இப்போது அந்தப் பெயரை மாற்றவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

பாளையங்கோட்டை நெல்லை கூட்டுறவு பண்டகசாலையில் பணம் கையாடல்

*வினா எண் 523 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாளையங்கோட்டை—நெல்லை கூட்டுறவு பண்டகசாலை நிர்வாகிகள் அவர்களது பதவி காலத்தில் ரூ.17 ஆயிரத்து 106 கையாடல் செய்ததாக சரக கூட்டுறவுச் சங்க பதிவாளருக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ஆம்:

(ஆ) பாளையங்கோட்டை திருநெல்வேலி கூட்டுறவு பண்டகசாலையில், நிர்வாகிகள், பண்டகசாலையின் கட்டிடத்தை காலி செய்யும் பொருட்டு முறையற்ற வசூலாக பணம் பெற்று அதை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டனர் என்று புகார் வந்ததின் பேரில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டது.